**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 23/2019**

**அ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமசாமி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | செவத்தான் |
| ஊர் | : | சூரம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 55 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 05.09.2023**

**2,3 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போதுசூரம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். எனக்கும் 3ம் எதிரி ரவி இருவருக்கும் பிரச்சனை ஏறப்ட்டு மேற்படி பிரச்சனைக்காக ஊர்கவுண்டரிம் நியாயம் சொல்வதற்காக 02.10.2018ம்தேதி மாலை 04.00 மணியளவில் 1,2 எதிரிகளின் பூந்தோட்டம் அருகே சென்றபோது எதிரிகள் மூவரும் ஒன்று சேர்ந்து கண்டாரஓலி பையா, தேவடியா பையா என்று தகாத வார்த்தையால் திட்டிக்கொண்டு ஓடி வந்தார்கள். 1 ம் எதிரி சகாதேவன் என் மீது கல்லை எடுத்து எறிந்தார். நான் ஒதுங்கி கொண்டேன். மீண்டும் கல்லை எடுத்து இடது பக்க முதுகின் மீது கல்லால் தாக்கினார். 2ம் எதிரி போத்துராஜ் இரும்பு பைப்பை எடுத்து வந்து எனது வலது பக்க புஜத்தின் மீது அடித்தார்.

2. நான் கீழே விழுந்து விட்டேன் எனது தம்பி பெருமாள் ஓடிவந்து என்னை தூக்க வந்தார். அப்போது எதிரி சகாதேவன் எனது தம்பி தலைமீது கையறுவாளல் தாக்கினார். மீண்டும் எதிரி சகாதேவன் கையாறுவாளல் எனது தம்பியை தாக்க வந்தபோது அவர் வலது கையில் தடுக்க வந்தபோது வலது கையில் நடுவிரலில் வெட்டு

காயம் ஏற்பட்டது. அதன்பிறகு எனது மகன் குப்புசாமி ஓடிவந்து சண்டையை தடுக்க வந்தபோது போத்துராஜ் மற்றும் சாகாதேவனும் எனது மகனை மடக்கி பிடித்து எனது மகனின் வலது முன்கையை போத்துராஜ் கடித்து காயப்படுத்தினார். எதிரி சகாதேவன் தடியால் எனது மகன் குப்புசாமியின் இடது முன்கையில் அடித்து காயப்படுத்தினார். அருகில் இருந்த ஊர்காரர்கள் சேர்ந்தவுடன் என்னை இருசக்கர வாகனத்தில் மருத்துவமனையில் அழைத்து செல்ல முயன்றபோதுஎதிரிகள் மூவரும் போகவிடால் வழிமறித்தனர். அதன்பின்னர் எனது தங்கை மகன் சுரேஷ் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி அடிப்பட்ட எனது தம்பி பெருமாளும் எனது மகனும் காவேரிப்பட்டிணம் அரசு மருத்துவனை அழைத்து சென்றார்கள். என்னை முருகன் என்பவர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இருசக்கர வாகனத்தில் அழைத்து செல்லும்போது 1ம் எதிரி மீண்டும் இந்த வழியாகத்தான் வரவேண்டும் உங்களை கொல்லமல் விடுவதில்லை என்று மிரட்டினார். போலீசார் என்னை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்து வாக்கமூலம் பதிவு செய்தார்கள். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

3. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் இரும்பு பிடியில் மரக்கட்டை சொறுகப்பட்ட கையாறுவாளை சம்பவத்தின் எதிரி சகாதேவன் எனது தம்பி பெருமாளையும், எனது மகன் குப்புசாமியையும் தாக்க பயன்படுத்தினார். **கையறுவாள் அ.சா.பொ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் இரும்பு பைப்பை கொண்டு எதிரி போத்துராஜ் என்னையும் எனது மகனையும் தாக்கினார். **இரும்பு பைப்பு அ. சா.பொ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 23/2019**

**அ.சா : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெருமாள் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | செவத்தான் |
| ஊர் | : | கூரம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 47 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 05.09.2023**

**2,3 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கூரம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 02.10.2018 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நானும் அ.சா.1 ம் எங்களுக்கும் எதிரி ரவிக்கும் நடந்த பிரச்சனை குறித்து நியாயம் கொடுப்பதற்காக ஊர் கவுண்டரை பார்ப்பதற்கு எதிரி சகாதேவனின் பூந்தோட்டம் அருகே சென்றபோது எதிரி சகாதேவன் கண்டாரஓலி மகனே, தேவிடியா மகனே எதற்காக ரவியிடம் பிரச்சனை செய்திர்கள் என்று எதிரி சகாதேவன் கல்லை எடுத்து எனது அண்ணன் மீது போட்டார். எனது அண்ணன் ஒதுங்கிவிட்டார். பேசிக்கொணடு இருக்கும்போது எதிரி சகாதேவன் மற்றொரு கல்லை எடுத்து எனது அண்ணனின் இடது பக்க முதுகின் மீது போட்டு காயப்படுத்தினார்.

2. எதிரி போத்துராஜ் இரும்பு பைப்பால் எனது அண்ணனின் இடது கை முட்யின் மீது அடித்து காயப்படுதினார். நான் எனது அண்ணனை துக்கசென்றபோது எதிரி சகாதேவன் கையறுவாளல் எனது தலையின் மீது வெட்டினார். மீண்டும் சகாதேவன் வெட்டவந்தபோது நான் தடுத்தபோது எனது வலது கை நடுவிரலில் வெட்டு காயம்

ஏற்பட்டது. நானும் கீழே விழுந்துவிட்டேன். அப்போது எனது அண்ணன் மகன் குப்புசாமி அங்கே வந்தார். குப்புசாமியையும் எதிரி சகாதேவன் இரும்பு பைப்பால் இடது கை முழங்கை அருகே அடித்து காயப்படுத்தினார். எதிரி போத்துராஜ் குப்புசாமியின் வலது முன்கையில் கடித்து காயப்படுத்தினார்.

3. அருகில் இருந்தவர்கள் வந்து சண்டைய விலக்கிவிட்டபோது எதிரிகள் சகாதேவனும் போத்துராஜும் எங்களை கொல்லமல் விடுவதில்லை என்று மிரட்டினார்கள். எனது தங்கை மகன் சுரேஷ் என்பவர் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி என்னையும் குப்புசாமியையும் காவேரிப்பட்டிணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள். எனது அண்ணனை முருகன் என்பவர் இருசக்கர வாகனம் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார். என்னையும் குப்புசாமியையும் மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததார்க்ள். அங்கு சென்ற சிகிச்சை பெற்றோம். போலிசார் விசாரித்தார்கள். அ.சா.பொ.1 ஐ வைத்து எதிரி சகாதேவன் என்னையும் எனது அண்ணனையும் தாக்கினார். அ.சா.பொ.2 ஐ வைத்து எதிரி போத்திராஜ் எனது அண்ணையும் எனது அண்ணன் மகனையும் தாக்கினார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 23/2019**

**அ.சா : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | குப்புசாமி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ராமசாமி |
| ஊர் | : | வீரமலை |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 31 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 05.09.2023**

**2,3 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது வீரமலையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை. அ.சா.2 எனது சித்தப்பா. இவ்வழக்கின் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரி ரவிக்கும் எங்களுக்கும் முன் விரோதம் இருந்தது. இதுகுறித்து ஊர் கவுண்டரிடம் சொல்வதற்காக எனது அப்பாவிம், எனது சித்தப்பாவும் 02.10.2018 ம் தேதி மாலை 04.00 மணியளவில் எதிரி சகாதேவனின் பூந்தோட்டம் அருகே சென்றபோது 1,2 எதிரிகள் அனது அப்பாவையும் சித்தப்பாவையும் கண்டாரஓலி பையா, தேவடியா பையா ரவியுடன் ஏன் பிரச்சனை செய்கிறிர்கள் என்று கேட்டு எதிரி சகாதேவன் கல்லை எடுத்து எனது அப்பாவின் மீது அடித்தார். எனது அப்பா விலகியாதல் அவர் மீது படவில்லை. மீண்டும் எதிரி சகாதேவன்கல்லை எடுத்து எனது அப்பாவின் இடது பக்க முதுகின் அடிததுது காய்பபடுத்தினார். எனது சித்தப்பா தடுக்க சென்றபோது எதிரி சகாதேவன் எனது சித்தப்பாவின் தலை மீது கையறுவாளல் வெட்டி காயப்படுத்தினார்.

2. மீண்டும் எதிரி சகாதேவன் கையறுவாளல் எனது சித்தப்பாவை வெட்ட

வந்தபோது எனது சித்தப்பா தடுத்ததில் வலது கை நடுவிரலில் வெட்டு காயம் ஏற்பட்டது. நான் தடுக்க சென்றபோது எதிரி போத்துராஜ்ம் சகாதேவனும் என்னை தடுத்து நிறுத்தி எதிரி போத்துராஜ் வலது முன்கையில் கடித்த காயப்படுத்தினார். எதிரி சகாதேவன் தடியால் எனது இடது கை முட்டியில் அடித்து காயப்படுத்தினார்.

3. அருகில் இருந்தவர்கள் சண்டையை விலக்கி விட்டனர் எனது அப்பாவை முருகன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது எதிரிகள் சகாதேவனும் போத்துராஜும் போகவிடாமல் தடுத்து ரவியிடம் பிரச்சனை செய்தால் உங்களை கொல்லமல் விடுவதில்லை என்று மிரட்டினார்கள். எனது அப்பாவை முருகன் இருசக்கர வாகனத்தில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார். அடிப்பட்ட நானும் எனது சித்தப்பாவும் 108 ஆம்புலன்ஸ் மூலம் காவேரிப்பட்டிணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம்.

4. அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை சென்று அங்கு மேல்சிகிச்சை பெற்றோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவத்தின் போது அ.சா.பொ.1 எதிரி சகாதேவனும் அ.சா.பொ.2 எதிரி போத்துராஜும் எங்களை தாக்க பயன்படுத்தினார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.